


**21. 05. 2026**

## தலைப்புச் செய்திகள்

**1.** தமிழக அமைச்சரவை 23 அமைச்சர்களுடன் இன்று விரிவாக்கம் செய்யப்பட்டு இலாக்காக்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவையில் 4 பெண்கள் இடம்பெற்றுள்ளனர்.

2. தமிழக அமைச்சரவையில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் இணைய உள்ளதாக அக்கட்சியின் தேசிய தலைவர் திரு. காதர் மொய்தீன் அறிவித்துள்ளார்.

**3.** பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் புதுதில்லியில் இன்றுமாலை நடைபெறுகிறது.

**4**. முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 35ஆவது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

**5.** ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் கடைசி லீக் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸை இன்று எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

*************

**அமைச்சர்கள் பதவி ஏற்பு**

தமிழக அமைச்சரவை 23 புதிய அமைச்சர்களுடன் இன்று விரிவாக்கம் செய்யப்பட்டு இலாக்காக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மக்கள் மாளிகையில் ஆளுநர் திரு.ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் புதிய அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இதன்படி த.வெ.க-வை சேர்ந்த 21 பேரும்,

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இருவரும் அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர்.

தூத்துக்குடி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட த.வெ.க-வின் ஸ்ரீநாத்-திற்கு - மீன்வளத்துறை,

அவிநாசி கமலிக்கு - கால்நடை

குமாரபாளையம் விஜயலெட்சுமி - பால்வளம்

காஞ்சிபுரம் ரஞ்சித்குமார் - வனத்துறை

கும்பகோணம் வினோத் - வேளாண் துறை

திருவாடானை ராஜீவ் - சுற்றுச்சூழல் பருவநிலை மாற்றம்

கடலூர் ராஜ்குமார் - வீட்டு வசதி நகர்புற வளர்ச்சி

அரக்கோணம் காந்தி ராஜ் - கூட்டுறவுத்துறை

ஒட்டப்பிடாரம் மதன்ராஜா - சிறு குறு நடுத்தர தொழில்துறை

ராஜபாளையம் ஜெகதீஸ்வரி - சமூகநலன் மகளிா் நலத்துறை

ஈரோடு விஜய்பாலாஜி - கைத்தறி ஜவுளித்துறை

ராசிபுரம் லோகேஸ் தமிழ் செல்வன் - வணிகவரி பத்திர பதிவுத்துறை

சேலம் தெற்கு விஜய் தமிழன் பாா்த்திபன் - போக்குவரத்து

ஸ்ரீரங்கம் ரமேஷ் - இந்து சமய அறநிலையத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளச்சோி குமாா் - செயற்கை நுண்ணறிவு தகவல் தொழில்நுட்பம்

ஸ்ரீபெரும்புதூர் தென்னரசு - வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை

கோயம்பத்தூர் வடக்கு சம்பத்குமாா் - பிற்படுத்தப்பட்டோா் நலத்துறை

அறந்தாங்கி முகமது ஃபர்வேஸ் - தொழிலாளர் நலத்துறை திறன்மேம்பாடு

தாம்பரம் சரத்குமாா் - மனிதவள மேம்பாடு

கிணத்துகடவு விக்னேஷ் - மதுவிலக்கு ஆயத்தீர்வை துறைகள் வழங்கப்பட்டுள்ளன.

காங்கிரஸ் கட்சி சாா்பில் கிள்ளியூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படட ராஜேஷ் குமாருக்கு - சுற்றுலாத்துறையும்,

மேலூர் விஸ்வநாதனுக்கு – உயர்கல்வித்துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 59 ஆண்டுகளுக்கு பின்னர் காங்கிரஸ் கட்சி தமிழக அமைச்சரவையில் இடம்பெறுகிறது.

இதனிடையே கே.ஏ. செங்கோட்டையனிடமிருந்து நிதித்துறை சென்னை ஆர்.கே.நகரை சேர்ந்த மாிய வில்சனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. கே.ஏ. செங்கோட்டையனுக்கு வருவாய் போிடர் மேலாண்மை துறை வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அமைச்சரவையில் மொத்தம் 4 பெண்கள் இடம்பெற்றுள்ளனர்.

அமைச்சரவையில் முதலமைச்சர் உட்பட தற்போது 33 பேர் இடம்பெற்றுள்ளனர்.

*************

## இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

தமிழக அமைச்சரவையில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கும் இடம்பெறும் என்று அக்கட்சியின் தேசிய தலைவர் திரு. காதர் மொய்தீன் அறிவித்துள்ளாா்..

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தொிவித்த அவர் தமிழக வெற்றி கழகத்தின் அழைப்பை ஏற்று இந்நடவடிக்கை என்று கூறினாா்.

இதன்படி தஞ்சை பாபநாசம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஷாஜகான் அமைச்சரவையில் இடம்பெறுகிறார் என்றும் அவர் கூறினார்.

அமைச்சர்களுக்கு பல்வேறு துறைகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் ஆதிதிராவிடர், சிறுபான்மையினர் நலத்துறை இதுவரை யாருக்கும் ஒதுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

*************

**அமைச்சரவை கூட்டம்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் இன்றுமாலை புதுதில்லியில் நடைபெறுகிறது.

மத்திய அரசின் கீழ் உள்ள பல்வேறு அமைச்சகங்களின் செயல்பாடுகள் குறித்து இந்த கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்படும் என தெரிகிறது.

மேற்காசிய நெருக்கடியின் மத்தியில் எரிபொருள் விலை ஏற்றம்,

முக்கிய வர்த்தக வழிதடமான ஹார்மோஸ் நீரிணையில் ஏற்பட்டுள்ள தடைகள்,

உலகளாவிய எரிசக்தி பாதுகாப்பு நிலைமையின் பின்னணியில் இந்த கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

அனைத்து துறைகளை சேர்ந்த மத்திய அமைச்சர்கள், இந்த உயர்நிலை கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

பிரதமர் தமது 5 நாடுகள் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ள நிலையில் இந்த கூட்டம் இன்று நடைபெறுகிறது.

ஒரே வாரத்தில் பெட்ரோல் டீசல் விலை இரு முறை உயர்த்தப்பட்டது குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என எதிா்பாா்க்கப்படுகிறது.

*************

**ஜே.பி.நட்டா**

தேசிய காச நோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் உலகின் பிரம்மாண்ட நோய் கண்டறியும் வசதி நம் நாட்டில் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தொிவித்துள்ளாா்.

ஜெனிவாவில் உலக சுகாதார பேரவை சாா்பிலான நுரையீரல் பாிசோதனை நிகழ்ச்சியில் பேசிய அவர், காசநோய் மற்றும் பிற நுரையீரல் நோய்களை கண்டறியும் நவீன வசதிகளை மத்திய அரசு அதிகாித்துள்ளதாக குறிப்பிட்டாா்.

தொழில்நுட்பம் கடைகோடி மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாகவும் கூறினாா்.

*************

**மேற்குவங்கம்**

மேற்குவங்க மாநிலம் ஃபால்டா சட்டப்பேரவை தொகுதி மறு தேர்தல் வாக்குப்பதிவில் பகல் 1 மணி நிலவரப்படி 60.43 சதவிகித வாக்குகள் பதிவாயின.

மாலை 6 மணிவரை வாக்குப்பதிவு தொடர்ந்து நடைபெறும்.

*************

**ராஜீவ்காந்தி**

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 35ஆவது நினைவு தினம் தீவிரவாத தடுப்பு தினமாக இன்று கடைபிடிக்கப்படுகிறது.

1991ஆம்ஆண்டு, இதேநாளில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தாா்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்ட சமூகவலைதள பதிவில் இந்நாளில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்திக்கு அஞ்சலி செலுத்துவதாக கூறியுள்ளாா்.

புதுதில்லியில் அமைந்துள்ள ராஜீவ்காந்தியின் நினைவிடமான வீர்பூமியில் காங்கிரஸ் கட்சியின் திருமதி சோனியாகாந்தி, திரு.மல்லிகார்ஜுன கார்கே, திரு.ராகுல்காந்தி, திருமதி பிாியங்கா காந்தி உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.செல்வபெருந்தகை உள்ளிட்டோா் மலரஞ்சலி செலுத்தினர்.

தீவிரவாத எதிா்ப்பு உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

திருச்சி நாச்சிகுறிச்சி சோழங்கநல்லூாில் தமிழ்நாடு வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக இயக்கத்தின் சாா்பில் ராஜீவ்காந்திக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

*************

**ராஜ்நாத்சிங்**

கொாிய தீபகற்பத்தில் இந்தியாவின் மனித நேய உதவிகளையும், அமைதிக்கான நிலைப்பாட்டையும் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் எடுத்துரைத்தாா்.

சியோலில் இந்திய போா் சின்னத்தை அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சருடன் இணைந்து திறந்துவைத்து பேசிய அமைச்சர் இந்திய - கொாிய குடியரசின் நட்புறவை மேம்படுத்துவதற்கான வலுவான அடித்தளம் உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டாா்.

இருநாடுகள் இடையேயான வரலாற்று பிணைப்புகளை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாகவும் சுட்டிக்காட்டினாா்.

கொாிய போாின்போது இந்திய படைகளின் பங்களிப்பை காட்சிபடுத்தும் புகைப்பட கண்காட்சியையும் அமைச்சர் பாா்வையிட்டாா்.

முன்னதாக இருநாடுகளுக்கிடையே புாிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

*************

**இருவாி**

**தென்காசி மாவட்டம் தமிழக கேரளா** எல்லையான புளியறை காவல் நிலைய சோதனைச்சாவடியில் கனரக வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கமல் கிஷோா் நள்ளிரவு ஆய்வு செய்தாா்.

போக்குவரத்து விதிகளை பின்பற்றாத வாகனங்களுக்கு அபராதம் விதிக்க அவர் அறிவுறுத்தினாா்.

**திருப்பத்தூர் மாவட்டத்தில் அக்ரி Stock** செயலியில் இதுவரை பதிவு செய்யாத விவசாயிகள் உடனடியாக பதிவு செய்துகொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி சிவசௌந்தரவள்ளி தொிவித்துள்ளாா்.

**நாமக்கல் மாவட்டம்** குமாரபாளையம்நகராட்சியில் தூய்மை மாத விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

**விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம்** துரைசாமிபுரம் கிராமத்தில் சட்டவிரோதமாக செயல்பட்ட கல்குவாாி கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இப்பணியில் ஈடுபடுத்தப்பட்ட இரண்டு ஹிட்டாச்சி இயந்திரங்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோா் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட புவியியல் சுரங்கத்துறை எச்சாித்துள்ளது.

*************

**தேயிலை தினம்**

சர்வதேச தேயிலை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

தேயிலையின் பொருளாதார முக்கியத்துவம், மருத்துவ குணங்களை எடுத்துரைக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் இத்தினத்தில் கடைபிடிக்கப்படுகிறது.

நீலகிரியில் தேயிலை விளைச்சல் குறித்து எமது செய்தியாளர்

**வாய்ஸ்**

*************

**நெல்லை**

நெல்லையில் புதிய ஆதார் சேவை மையத்தை ஆட்சித்தலைவர் திரு.சுகுமார் திறந்துவைத்தார்.

தமிழகம் புதுச்சேரியில் 30 மையங்களை திறக்க திட்டமிடப்பட்டுள்ளதாக பெங்களுரு மண்டல துணை இயக்குனர் பிரியா ஸ்ரீகுமார் இந்நிகழ்ச்சியின்போது தெரிவித்தார்.

**வாய்ஸ்**

*************

**நாகை**

**நாகை மாவட்டத்தில் பிரதமரின் விவசாயி** கவுரவ நிதி திட்டத்தில் சேர்வதற்கான சிறப்பு முகாம் இ-சேவை மையங்களில் அடுத்த மாதம் 15ஆம் தேதிவரை நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

## வாய்ஸ்

*************

## வானிலை

நீலகிரி கோவை தேனி திண்டுக்கல் ஈரோடு மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*************

## கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் அஹமதாபாத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் கடைசி லீக் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

பிளே ஆஃப் சுற்றுக்கு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுரு, குஜராத் டைட்டன்ஸ், சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் ஏற்கனவே தகுதி பெற்றுள்ளன.

*************

## பேட்மிண்டன்

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் அஷ்மிதா சாலிகா முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சாலிகா மலேசியாவின் ஜின் வேயை 21-13 21-16 என்ற நேர் செட்களில் வென்றார்.

*************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**